பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை
29 07 2024 **MONDAY** 7 15 **PM**
வணக்கம், ஆகாஷவாணி - செய்திகள்
தலைப்புச் செய்திகள்

1. கடலோர காவல்படையின் திறன்களை மேம்படுத்துவதற்கான திட்டங்களுக்கு பாதுகாப்பு தளவாடங்கள் கொள்முதல் குழுமம் ஒப்புதல் அளித்துள்ளது.
2. குழாய் மூலம் குடிநீர் இணைப்பு வழங்கும் திட்டத்தின் மூலம் தமிழகத்தில் உள்ள 84 சதவீத கிராமப்புற வீடுகள் பயனடைந்துள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.
3. தமிழகத்தில் நூலகங்களின் மேம்பாட்டிற்காக 10 கோடி ரூபாய் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளதாக மத்திய அமைச்சர் திரு. கஜேந்திரசிங் ஷெகாவத் கூறியுள்ளார்.
4. சாதிவாரி கணக்கெடுப்பை மத்திய அரசு நடத்த வேண்டும் என்று காங்கிரஸ் வலியுறுத்தியுள்ளது.
5. பாரிஸ் ஒலிம்பிக் ஹாக்கிப் போட்டியில் இந்தியா – அர்ஜென்டினா இடையேயான ஆட்டம் டிராவில் முடிவடைந்தது.

>>>><<<<

பாதுகாப்பு தளவாடங்கள் கொள்முதல் குழுமத்தின் கூட்டம், பாதுகாப்புத் துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் தலைமையில் இன்று புதுதில்லியில் நடைபெற்றது.

கடலோர காவல்படையின் திறன்களை மேம்படுத்துவதற்கான திட்டங்களுக்கு இக்கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டதாக மத்திய அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

>>>><<<<

தமிழகத்தில் பசுமை சுற்றுலா திட்டங்களுக்கு ஊக்கமளிக்கப்படும் என்று மத்திய சுற்றுலாத்துறை அமைச்சர் திரு. கஜந்திர சிங் ஷெகாவத் கூறியுள்ளார்.

இன்று மக்களவையில் கேள்வி நேரத்தின்போது இதனை தெரிவித்த அவர், மாநில அரசுகள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளுடன் இணைந்து சுற்றுலாத் தலங்களை மேம்படுத்துவற்கான ஒரு திட்டம் வகுக்கப்பட்டுள்ளதாக கூறினார்.

இந்த திட்டத்தின்கீழ், மாமல்லபுரம் மற்றும் நீலகிரியை பசுமை சுற்றுலா தலங்களாக உருவாக்க ஊக்கமளிக்கப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

தமிழகத்தில் நூலகங்களின் மேம்பாட்டிற்காக 10 கோடி ரூபாய் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளதாகவும் திரு. கஜேந்திரசிங் ஷெகாவத் கூறினார்.

>>>><<<<

அமைப்புசாரா தொழிலாளர்களுக்கான இணையதளத்தில் 29 கோடிக்கும் மேற்பட்டோர் பதிவு செய்துள்ளதாக மத்திய தொழிலாளர் நலத்துறை இணையமைச்சர் **Shobha Karandlaje** கூறியுள்ளார்.

மக்களவையில் கேள்வி நேரத்தின் போது இதனை தெரிவித்த அவர், அமைப்பு சாரா தொழிலாளர்களுக்கென தேசிய அளவில இந்த இணையதளம் தொடங்கப்பட்டதை சுட்டிக்காட்டினார்.

இந்த இணையதளத்தில் பதிவு செய்வோருக்கு ஒருங்கிணைந்த கணக்கு எண் வழங்கப்படுவதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

**>>>><<<<**

உதான் திட்டத்தின் கீழ், 579 விமான வழித்தடங்கள் செயல்பாட்டில் உள்ளதாக சிவில் விமான போக்குவரத்துத்துறை இணையமைச்சர் திரு. **Muralidhar Mohal** கூறியுள்ளார்.

மாநிலங்களவையில் கேள்வி நேரத்தின் போது இதனை தெரிவித்த அவர், இந்த வழித்தடங்கள் 85 விமான நிலையங்களை இணைத்துள்ளதாக தெரிவித்தார்.

நாடுமுழுவதும் 21 பசுமை விமான நிலையங்களை ஏற்படுத்த கொள்கை அளவில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளதாகவும் திரு. **Muralidhar Mohal** குறிப்பிட்டார்.

**>>>><<<<**

புத்தொழில் நிறுவனங்களின் வளர்ச்சிக்கு தொடர்ந்து ஊக்கமளிக்கப்பட்டு வருவதாக மத்திய அரசு கூறியுள்ளது.

மக்களவையில் கேள்வி நேரத்தின் போது இதனை தெரிவித்த திறன் மேம்பாட்டுத்துறை இணையமைச்சர் திரு. ஜெயந்த் சௌத்ரி, நாடுமுழுவதும் ஒரு லட்சத்து 40 ஆயிரத்திற்கும் கூடுதலான புத்தொழில் நிறுவனங்கள் செயல்பாட்டில் உள்ளதாக கூறினார்.

இதன்மூலம் 15 லட்சம் பேருக்கு நேரடி வேலைவாய்ப்பு கிடைத்திருப்பதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

**>>>><<<<**

குழாய் மூலம் குடிநீர் இணைப்பு வழங்கும் திட்டத்தின் மூலம் கிராமப்புறங்களில் 15 கோடிக்கும் மேற்பட்ட குடியிருப்புகள் குடிநீர் இணைப்பு வசதியை பெற்றிருப்பதாக மத்திய நீர்வளத்துறை இணையமைச்சர் திரு. சோமண்ணா கூறியுள்ளார்.

இன்று மாநிலங்களவையில் கேள்வி நேரத்தின் போது இதனை தெரிவித்த அவர், எஞ்சியுள்ள குடியிருப்புகளுக்கும் விரைவில் இந்த வசதி ஏற்படுத்தி தரப்படும் என்றார்.

தமிழகத்தை பொறுத்தவரை 84 சதவீத கிராமப்புற வீடுகளுக்கு குடிநீர் இணைப்புகள் வழங்கப்பட்டிருப்பதாக அமைச்சர் கூறினார்.

இதன்மூலம் ஒரு கோடியே 6 லட்சம் வீடுகள் பயனடைந்திருப்பதாகவும் திரு. சோமண்ணா தெரிவித்தார்.

>>>><<<<

மத்திய அரசின் நடைபாதை வியாபாரிகளுக்கான கடனுதவி திட்டத்தின்கீழ், 11 ஆயிரத்து 713 கோடி ரூபாய் அளவிற்கு கடனுதவி வழங்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.

இன்று மாநிலங்களவையில் கேள்வி நேரத்தின்போது இதனை தெரிவித்த வீட்டு வசதித்துறை இணையமைச்சர். திரு. **Tokhan Sahu,** நடைபாதை வியாபரிகளின் வர்த்தகத்தை மேம்படுத்தும் நோக்கில் இந்த கடனுதவி வழங்கப்படுவதாக தெரிவித்தார்.

இந்த திட்டத்தின் கீழ் 86 லட்சத்திற்கும் கூடுதலான எண்ணிக்கையில் கடனுதவி வழங்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

இதில் 31 லட்சத்திற்கும் கூடுதலான கடனுதவிகள் திருப்பி செலுத்தப்பட்டுள்ளதாகவும் திரு. **Tokhan Sahu** தெரிவித்தார்.

>>>><<<<

சாதிவாரி கணக்கெடுப்பை மத்திய அரசு நடத்த வேண்டும் என்று காங்கிரஸ் வலியுறுத்தியுள்ளது.

இன்று மக்களவையில் பட்ஜெட் மீதான விவாதத்தில் பங்கேற்றுப் பேசிய காங்கிரஸ் முன்னாள் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான திரு. ராகுல் காந்தி, வேளாண் விளைபொருட்களுக்கு குறைந்தபட்ச ஆதரவு விலையை நிர்ணயம் செய்யும் நடைமுறைக்கு சட்டபூர்வ அந்தஸ்து வழங்க வேண்டும் என்று வலியுறுத்தினார்.

அக்னிவீர் திட்டம் குறித்தும் திரு. ராகுல்காந்தி கேள்வி எழுப்பினார்.

அப்போது குறுக்கிட்டுப் பேசிய பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங், இந்த திட்டம் குறித்து தவறான தகவல்களை பரப்ப வேண்டாம் என்று கேட்டுக் கொண்டார்.

இதுகுறித்து முழுமையாக விவாதிக்க தாம் தயாராக இருப்பதாகவும் திரு. ராஜ்நாத் சிங் கூறினார்.

தொடர்ந்து பேசிய திரு. ராகுல் காந்தி, சில புகைப்படங்களை காண்பிக்க முயன்றபோது, பேரவைத் தலைவர் திரு. ஓம் பிர்லா அதற்கு எதிர்ப்பு தெரிவித்து, இதுபோன்ற நடவடிக்கைகள் அவையின் நெறிமுறைகளுக்கு எதிரானது என்றார்.

>>>><<<<

தேசிய கல்விக் கொள்கை, ஒவ்வொரு மாணவரின் திறனை வெளிக்கொண்டு வர உதவிடும் என்று மத்திய கல்வித்துறை இணையமைச்சர் டாக்டர் **Sukanta Majumdar** தெரிவித்துள்ளார்.

தேசிய கல்விக் கொள்கை நடைமுறைக்கு வந்து நான்கு ஆண்டுகள் நிறைவடைந்ததை ஒட்டி, இன்று புதுதில்லியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்து கொண்டு அவர் பேசினார்.

மாணவர்கள் மட்டுமின்றி, ஆசிரியர்களுக்கான தொலைநோக்கு திட்டமாகவும் இந்த கொள்கை உள்ளது என்று அவர் குறிப்பிட்டார்.

தாய்மொழி வழி கற்பித்தலுக்கு, தேசிய கல்விக் கொள்கையில் முக்கியத்துவம் அளிக்கப்பட்டிருப்பதாகவும் டாக்டர் **Sukanta Majumdar** தெரிவித்தார்.

>>>><<<<

பீகாரில் பிஜேபி மாநிலத் தலைவராக டாக்டர் திலிப் ஜெய்ஸ்வால் இன்று பொறுப்பேற்றுக் கொண்டார்.

பாட்னாவில் கட்சி தலைமை அலுவலகத்தில் அவருக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், பீகார் சட்டப்பேரவை தேர்தலில் பிஜேபி தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி மீண்டும் வெற்றிபெற வேண்டும் என்ற நோக்கில் தமது பணிகள் இருக்கும் என்று குறிப்பிட்டார்.

>>>><<<<

உத்தரபிரதேச சட்டப்பேரவையின் மழைக்கால கூட்டத்தொடர் இன்று தொடங்கியது.

பேரவை கூடியதும் எதிர்கட்சி உறுப்பினர்கள், மின்விநியோக பிரச்சினையை எழுப்பி அமளியில் ஈடுபட்டனர்.

நடப்பு நிதியாண்டிற்கான முதலாவது துணை மதிப்பீட்டு அறிக்கை நாளை பேரவையில் தாக்கல் செய்யப்படவுள்ளது.

>>>><<<<

தமிழகத்தில் மகப்பேறு உயிரிழப்புகள் பெருமளவில் குறைந்துள்ளதாக மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன் கூறியுள்ளார்.

இன்று சென்னையில் இதுதொடர்பான பயிலரங்கை தொடங்கி வைத்த பின்னர் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

அரசு மருத்துவமனைகளில் 59 சதவீத பிரசவங்கள் நடைபெறுவதாகவும் அமைச்சர் கூறினார்.

>>>><<<<

தமிழகத்தின், கிருஷ்ணகிரி மாவட்டம், ஒசூர் வனக்கோட்டத்தில் காட்டு யானைகளை கண்காணிப்பதற்கென கட்டுப்பாட்டு மையம் ஒன்று திறக்கப்பட்டுள்ளது.

யானைகள் ஊருக்குள் நுழைவதை தடுப்பதற்காக இந்த மையம் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் - ராஜா 39 செகண்ட்ஸ்)

>>>><<<<

லெபனானில் உள்ள இந்தியர்கள் எச்சரிக்கையுடன் இருக்குமாறு மத்திய அரசு அறிவுறுத்தியுள்ளது.

லெபனானில் செயல்படும் **Hezbollah** அமைப்பிற்கு இஸ்ரேல் எச்சரிக்கை விடுத்ததை அடுத்து, இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

லெபனானில் உள்ள இந்தியர்கள் தூதரகத்துடன் தொடர்பில் இருக்குமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

லெபனானிற்கு பயணம் மேற்கொள்ள திட்டமிட்டுள்ள இந்தியர்களுக்கும் இந்த அறிவுறுத்தல் பொருந்தும் என்று எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**>>>><<<<**

பாரிஸ் ஒலிம்பிக் ஹாக்கிப் போட்டியில் இந்தியா-அர்ஜென்டினா இடையேயான ஆட்டம் டிராவில் முடிவடைந்தது.
இரு அணிகளும் தலா ஒரு கோல் போட்டன.
துப்பாக்கிச் சுடும் போட்டியில் இந்தியாவின் மனுபாக்கர் - **Sarabjot Singh** இணை, வெண்கலப் பதக்கத்திற்கான ஆட்டத்திற்கு முன்னேறியுள்ளது.
10 மீட்டர் கலப்பு குழுப் பிரிவின் இறுதியாட்டத்திற்கான தகுதிச் சுற்றில் இந்த இணை, 3-வது இடத்தை பிடித்ததன் மூலம் வெண்கலப் பதக்கத்திற்கான ஆட்டத்திற்கு முன்னேறியது.
பேட்மிண்டன் போட்டியில் லக்ஷயா சென் 21-19, 21-14 என்ற செட்கணக்கில் பெல்ஜியத்தின் **Julien Carraggi** –யை வென்றார்.
இப்போட்டியில் 4 தங்கம், 2 வெள்ளி, ஒரு வெண்கலப் பதக்கங்களுடன் ஜப்பான் மற்றும் தென்கொரியா முதலிடத்தில் உள்ளன.
4 தங்கம் உட்பட 6 பதக்கங்களுடன் ஆஸ்திரேலியா மூன்றாவது இடத்திலும், 3 தங்கம் உட்பட்ட 12 பதக்கங்களுடன் அமெரிக்கா 4வது இடத்திலும் உள்ளன.
ஒரு வெண்கலப்பதக்கத்துடன் இந்தியா 22-வது இடத்தில் உள்ளது.

**>>>><<<<**

ஈரானில் நடைபெற்ற இயற்பியல் ஒலிம்பியாட்டில் இந்தியா 2 தங்கம், 3 வெள்ளிப்பதக்கங்களை வென்றது.

**Rhythm Kedia** மற்றும் **Ved Lahoti** தங்கப்பதக்கம் வென்றனர்.

**Akarsh Raj Sahay, Bhavya Tiwari** மற்றும் **Jaiveer Singh** வெள்ளிப்பதக்கம் வென்றனர்.

**>>>>END<<<<**